# விளையாட்டுவழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 10
# ‘அழகாக இருக்கிறேன்’

**<u>கண்ணோட்டம்:</u>**

பிள்ளைகள் ஏற்கெனவே வாசித்த ‘அழகாக இருக்கிறேன்’ என்னும் கதையையும் அக்கதையில் வரும் பறவைகள் தொடர்பான சொற்களையும் விளையாட்டுவழி நினைவுகூர்வார்கள். இதனால், அவர்கள் அச்சொற்களை நன்கு மனத்தில் பதிய வைத்துக் கொள்வார்கள்.

**<u>கற்றல் குறிக்கோள்கள்</u>:**

**<u>கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்</u>**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**

   ✓ பாடலில் இடம்பெற்றுள்ள அசைவுகளைச் செய்தல், விளையாட்டுகளை விளையாடுதல், வாசித்துக் காட்டப்படும் கதைகளுக்கு ஏற்பச் செயற்படுதல்

   ✓ சுற்றுப்புறத்தில் காணப்படும் தாய்மொழியில் அச்சிடப்பட்டவை/பாடல்கள்/விளையாட்டுகள் ஆகியவற்றின்பால் சக வயதினர் அல்லது பெரியவர்களின் கவனத்தைத் திருப்புதல்

**படிநிலைகள்**

1. பிள்ளைகளை நீங்கள் ஏற்கெனவே வாசித்துக் காட்டிய 'அழகாக இருக்கிறேன்' என்னும் கதையை நினைவுகூர்ந்து சொல்லச் சொல்லுங்கள்.



ஆசிரியர் அட்டைப்படத்தைப் பிள்ளைகளிடம் காட்டுதல்



பிள்ளைகள் ஆசிரியருடன் சேர்ந்து கதையைப் படித்தல்

2. பிள்ளைகளை இப்பாடத்துடன் ஒட்டிய விளையாட்டுக்குத் தயாராகச் சொல்லுங்கள்.
3. நீங்கள் பறவைகளின் படங்களைத் தயாராக வைத்துக்கொள்ளுங்கள்.



மயில்



சிட்டுக்குருவி



**காகம்**



**கிளி**



**புறா**



**கொக்கு**

4. நீங்கள் ஒரு பிள்ளையை வகுப்பின்முன் வரச் சொல்லுங்கள். அப்பிள்ளையை மேசையில் திருப்பி வைக்கப்பட்ட படங்களிலிருந்து ஒரு படத்தை எடுத்துப் பார்க்கச் சொல்லுங்கள்.

5. படத்தில் இருக்கும் பறவையின் பெயரை ஊகிப்பதற்காக மற்றப் பிள்ளைகளை நின்று கொண்டிருக்கும் பிள்ளையிடம் கேள்விகள் கேட்கச் சொல்லுங்கள்.

எ.டு:

- இப்பறவை உயரப் பறக்குமா?
- இப்பறவை பச்சை நிறமா?
- இப்பறவை பேசுமா?

6. இந்தக் கேள்விகளுக்கு நின்று கொண்டிருக்கும் பிள்ளை ‘ஆமாம்’ அல்லது ‘இல்லை’ என்று பதில் கூறலாம்.

7. உட்கார்ந்திருக்கும் பிள்ளைகள் பதிலைக் கண்டுபிடித்துவிட்டால், அடுத்த பிள்ளையை வகுப்பின்முன் கூப்பிடுங்கள். இப்படி எல்லாப் பிள்ளைகளுக்கும் வாய்ப்புக் கிடைக்கும்வரை இந்த விளையாட்டைத் தொடருங்கள்.

****************************************